விலை: 50.00
பக்கங்கள் : 12

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 278 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 06 வெள்ளிக்கிழமை (23.09.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

நிலையான சமாதானத்துக்காக

# தமிழ் எம்.பிக்களுடன் பேச்சுவார்த்தை



## சபையில் நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் நிலையான சமாதானத்தை பேணும் வகையில் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என நீதியமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். (02ஆம் பக்கம் பார்க்க)

எதிர்வரும் மாதம் முதல்

## வரிச்சலுகைகளை திருத்த நடவடிக்கை

(கொழும்பு)

எதிர்வரும்மாதம்முதல் அனைத்து வரிச்சலுகைகளிலும் திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக் 11

## மின்வெட்டு நேரம் இன்று முதல் அதிகரிப்பு

(கொழும்பு)

இன்று முதல் எதிர்வரும் 25ஆம் திகதி வரை நாளொன்றுக்கு 2 மணித்தியாலங்கள் மற்றும் 20 நிமிடங்கள் மின்வெட்டை மேற் 11

சாரதி அனுமதிப்பத்திரம்

## செல்லுபடியாகும் காலம் நீடிப்பு

(கொழும்பு)

சாரதி அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் கால எல்லையை தற்காலிகமாக நீடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகன சட்டத்தின் கீழான கட்டளைகளுக்கு அமைவாக, போக்கு 11

58 இராணுவ அதிகாரிகள்

# ஐரோப்பிய நாடுகளுக்கு நுழைவதற்குத் தடை

## மனித உரிமைகள் பேரவை நடவடிக்கை

(ஜெனிவா) போர்க்குற்றங்களை எதிர்நோக்கியுள்ள 58 இராணுவ அதிகாரிகளை தண்டிக்கும் சர்வதேச பொறிமுறையை ஜெனிவா மனித உரிமைகள் பேரவை நடைமுறைப்படுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (11ஆம் பக்கம் பார்க்க)

## தண்டனை வழங்காத நாடே இலங்கை

ஐ.நாவில் சந்தியா

(ஜெனிவா)

காணாமல்போன 02

கசூரினா கடற்கரையில்

## ஐரோ.பெண் துன்புறுத்தல்

10 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கசூரினா சுற்றுலா கடற்கரைக்கு ஐரோப்பிய ஒன்றிய 02

## அனைத்து தமிழ் உறவுகளும் திலீபனுக்கு அஞ்சலி செலுத்த வேண்டும்

திலீபன் பொதுக்கட்டமைப்பு கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபனுக்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை உண்ணா நோன்பு 11

ஐ.எம்.எப்புடன் பேச்சு தொடர்கின்றன

## இறுதி உடன்பாடு இன்னும் எட்டப்படவில்லை

ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்துடன் இன்னமும் இறுதி உடன்பாட்டை 11

சமபோசா, யஹபோசா, லக்போசாவில்

## புற்றுநோயை உண்டாக்கும் ஆபத்தான இரசாயன பதார்த்தம்

3 நிறுவனங்களுக்கு நீதிமன்றம் அழைப்பு

(கொழும்பு)

குழந்தைகளுக்கு வழங்கப்படும் சமபோசா, யஹபோசா, லக்போசா ஆகிய மூன்றிலும் புற்றுநோயை உண்டாக்கும் ஆபத்தான இரசாயன பதார்த்தம் (அப்லாடோக்சின்) அனுமதிக்கப்பட்ட 02



## அனைத்து சமூகங்களினதும் உரிமைகளை அரசு பாதுகாக்கின்றது

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

(நியூயோர்க்)

அனைத்து சமூகங்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படும் சமூகத்தை கட்டியெழுப்புவதற்கான முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் ஐக்கிய நாடுகள் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் எம்.பி...

நேற்று நடைபெற்ற பாராளுமன்ற அமர்வின்போது ஜெனிவாவில் இடம் பெறும் மனித உரிமைகள் பேரவை அமர்வின்போது. போர்க்குற்றம் தொடர்பில் வெளியக விசாரணைகள் இலங்கையின் அரசியலமைப்புக்கு முரணானவை என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் நேற்று பாராளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் கேள்வி எழுப்பப்பட்டது. கடந்த 2015 செப்டம்பரில் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவின் அனுசரணையில் அதாவது அவரது இணக்கத்துடன், 33/1 என்ற தீர்மானம் முன்வைக்கப்பட்டது.

அதில், சர்வதேச நாடுகளின் நீதிபதிகளால் விசாரிக்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், பின்னர் இலங்கையின் கோரிக்கைக்கு அமைய அது பொதுநலவாய நாடுகள் மற்றும் ஏனைய நாடுகளின் நீதிபதிகள் என்றவாறு மாற்றப்பட்டிருந்தது.

எனினும், இந்த முறை வெளிவிவகார அமைச்சருடன் அப்போதைய மற்றும் தற்போதைய நீதியமைச்சராக விஜேதாச ராஜபக்ஷவும் ஜெனிவா சென்றிருந்த நிலையில், அரசாங்கத்தின் நிலைப்பாடு அமர்வின்போது தெரிவிக்கப்பட்டது.

இதன்போது. வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வெளியக பொறிமுறை அரசியலமைப்புக்கு முரணானது என்று குறிப்பிட்டிருந்தார்.

முன்னதாக 2015 ஆம் ஆண்டு அரசியலமைப்புக்கு உட்பட்டிருந்த இந்த விடயம், தற்போது அரசியலமைப்புக்கு முரணானது எப்படி என்று சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேள்வி எழுப்பியது. இதற்கு பதிலளித்த நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, தமிழ் தேசியக் கூட்டமைப்பு இந்த விடயத்தில் கொண்டிருக்கும் அக்கறையை தாமும் கொண்டிருப்பதாக குறிப்பிட்டார்.

எனினும், மாறிவந்த அரசாங்கங்கள் காரணமாக இதில் மாற்றங்கள் ஏற்பட்டமை யாவரும் அறிந்ததே. இந்த நிலையில் இந்த பிரச்சினை குறித்து எதிர்வரும் வாரங்களில் வடக்கு, கிழக்கில் நிலையான சமாதானத்தை பேணும் வகையில் வட. - கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த உத்தேசித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## தண்டனை...

கணவருக்காகச் சளைக்காமல் போராடியதற்காக சர்வதேச விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட மனித உரிமை செயற்பாட்டாளர் சந்தியா எக்னெலிகொட, இலங்கை குற்றச் செயல்களுக்குத் தண்டனை வழங்காத நாடு என்று சர்வதேச சமூகத்துக்குத் தெரிவித்துள்ளார்.

12 வருடங்களுக்கும் மேலாக நீதிக்காகப் போராடி வரும் சந்தியா எக்னெலிகொட, ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் சபையின் உயர்மட்ட அமர்வில் உரையாற்றும்போதே சிங்கள மொழியில் இதனைக் கூறியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

என்னைப் போன்று காணாமல்போன தமது உறவுகளைத் தேடி வரும் சிங்கள, தமிழ், முஸ்லிம் தாய்மார்கள் நாடு பூராகவும் உள்ளனர்.

வடக்கில் தமிழ் தாய்மார்கள் தொடர்ந்து போராடி வருகின்றனர். என்னைப் போலவே, அவர்களும் பொலிஸ் போன்ற பல அரசு நிறுவனங்களுடன் மோதுகின்றார்கள்.

கடந்த நான்கு தசாப்தங்களில் பல ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்ட போதிலும், எந்தவொரு ஆணைக்குழுவும் காணாமல்போனவர்களுக்கோ அல்லது அவர்களது குடும்பங்களுக்கோ நீதி வழங்கவில்லை" என்றார். (ம-7)

## ஐரோ. பெண்...

பெண்ணை பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் 10 பேர் ஊர்காவற்றுறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் அனைவரும் போதையில் இருந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காரைநகர் கசூரினா சுற்றுலா கடற்கரையில் ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த ஸ்பெயின் நாட்டு பெண் சுற்றுலா வந்துள்ளார். அங்கு போதையில் நின்ற குழுவினர் அவரை பாலியல் ரீதியாக துன்புறுத்தியுள்ளனர்.

அதுதொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் போதையில் நின்ற 10 பேரை கைதுசெய்தனர். அவர்கள் தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ம-7.33.104)

## புற்றுநோயை...

அளவிற்கு அதிகமாக அடங்கியுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனை விற்பனை செய்யும் 3 முன்னணி நிறுவனங்களின் 6 இயக்குனர்களையும் நவம்பர் 18ஆம் திகதி கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு மேலதிக நீதவான் மஞ்சுள ரத்நாயக்க உத்தரவிட்டுள்ளார்.

அந்த அறிக்கையின்படி, லக்போஷா என்ற தயாரிப்பில் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச அளவை விட 26 மடங்கு அதிக "அப்ளாடோக்சின்" இருப்பதாக நீதிமன்றத்தில் தகவல் முன்வைக்கப்பட்டுள்ளது. (ம-7)


17ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
பொன்னுத்துரை சரவணபவன்
(ராசா - மண்டைதீவு 06)
திதி : அபரபக்க திரியோதசி

அன்னை மடியில் 1953.04.26
ஆண்டவன் அடியில் 2005.10.01

பாரினில் எமைப் பிரிந்து
பதினேழு ஆண்டுகள் வந்தது அப்பா!
எமை சோதித்தது போதும் அப்பா!
சொல்லொணா வேதனையில்
துடிக்கும் எம்மிடம் ஓடோடி வந்திடப்பா!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல. 15, குளம்கரை லேன்,
கொக்குவில்.

நின் நினைவில் வாழும்
குடும்பத்தார்

(12865)



# மரண அறிவித்தல்



## சின்னையா லோகேஸ்வரி (லோகா)

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னையா லோகேஸ்வரி அவர்கள் நேற்று (22.09.2022) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும் சின்னையா அவர்களின் அன்பு மனைவியும் மணிவண்ணன் (இத்தாலி), மதனராசன் (ஆசிரியர் - யா/சென்.சாள்ஸ் வித்தியாலயம்), மனோகரன் (கண்ணன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சாந்தினி, சிவாஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும் மதுசா, தர்சனா, மதுசூதனன், தயானந்தன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.09.2022) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(12867)

கரந்தன் வீதி,
நீர்வேலி மேற்கு.

077 418 6860

தகவல் :-
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டி வாழ்த்துகின்றோம்

Jaffna Central College

G.C.E.(A/L) 2021(2022) BEST RESULTS



GNANAMOORTHY SURIYA
3A PHYSICAL SCIENCE
DISTRICT RANK -01

இம் மாணவர்களின் வெற்றிக்காக அயராது உழைத்த ஆசிரியப் பெருந்தகைகளையும் வழிநடத்திய அதிபர் மற்றும் பிரதி அதிபர்களையும் மனதார வாழ்த்துகின்றோம்.
க.பொ.த (சா/த)-2018 இல் 9 A விஷேட சித்திகளைப் பெற்ற இரண்டு மாணவர்களுக்கு தலா Rs. 140 000.00 பெறுமதியான புலமைப்பரிசில்களை வழங்கிய Dr.S.Sabeel (U.K) மற்றும் Mr.R.Rajeevan (U.K) ஆகியோர்களுக்கு எமது உளம் கனிந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம்.



KIRUBAKARAN HARIKARAN
3A BIOSYSTEMS TECHNOLOGY
DISTRICT RANK -01

(c-4960)



KUMARARAJAHSHARMA RAKESHSHARMA
3A BIOLOGICAL SCIENCE
DISTRICT RANK -21



PRINSON KUNARAJ
3A PHYSICAL SCIENCE
DISTRICT RANK -39



SIVAKULASINGAM THIRUMENAN
3A PHYSICAL SCIENCE
DISTRICT RANK -71



BALASUBRAMANIYAM DILAXSHAN
3A COMMERCE
DISTRICT RANK -104



SIRIKARAN ATHITHAN
3A ARTS
DISTRICT RANK -44



ARUDKUMARAN SUJEEPAN
3A ARTS
DISTRICT RANK -65

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| SRISKANDARAJAH LAKSHAN 2AB BIOLOGICAL SCIENCE DISTRICT RANK-64 | THAVAGNANARANJAN KIRISHAN 2AB E.TECH DISTRICT RANK-04 | MAHALINGAM THARSHAN 2AB BIO TECH DISTRICT RANK-06 | QUNTON GILBERT SHAMSAN 2AB E- TECH DISTRICT RANK-09 | SATHANANTHAN GOWSIYAN ABC E -TECH DISTRICT RANK-13 | THAVAGNANARANJAN KIRISHANTH 2AC E-TECH DISTRICT RANK-08 | SIVANESALINGAM KABILKANTHAN B2C E-TECH DISTRICT RANK-49 | HARINDIRAN VINUJAN 2AB COMMERCE DISTRICT RANK-94 | ARULRASA NINOJAN 2AB ARTS DISTRICT RANK-147 |

யாழ்.மத்திய கல்லூரி, பழைய மாணவர் சங்கம்.


## தென்னை பயிர்ச்செய்கை சபையால் ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம்

(யாழ்ப்பாணம்)

தென்னைப் பயிர்செய்கைச் சபையின் தொடர் நிகழ்வாக நடைபெற்று வரும் தென்னைப் பயிர்ச்செய்கை ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் இன்னொரு விரிவாக்கல் நிகழ்வானது தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் தே. வைகுந்தன் தலைமையில் சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் இன்று நடைபெறவுள்ளது.

அந்த வகையில் இன்று காலை 9 மணிக்கு சங்கரத்தை சங்கானை, 11 மணிக்கு தன்னைசிட்டி விநாயகர் ARK மண்டபம் ,மதியம் 2 மணிக்கு சடையாளி கண்ணபிரான் காரைநகர் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

இதன்போது பயனாளிகளுக்கு தென்னங்கன்றுகளும் காய்கறி விதைப்பைக்கற்றுகளும் விநியோகிக்கப்படவுள்ளன.

குறித்த நிகழ்வு நேற்றும் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

## முதியோர் சங்க ஆண்டு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் 11 ஆவது ஆண்டு விழாவானாது நாளை மறுதினம் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் முதியோர் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (4)



தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு வல்வெட்டித்துறையில் உள்ள எம். ஜி. ஆர் சதுக்கத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. (படம்- மகாலிங்கம்)

## ரவிகரன் மற்றும் மயூரனின் கைதுக்கு முல்லைத்தீவில் பாரிய ஆர்ப்பாட்டம்

(முல்லைத்தீவு)

**ரவிகரன் மற்றும் மயூரன் உள்ளிட்டவர்களின் கைதுக்கு எதிராக முல்லைத்தீவில் நேற்று கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.**



முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு குருந்தூர் மலைப்பிரதேசத்தில் தமிழ் மக்களினுடைய 632 ஏக்கர் காணிகள் அபகரிப்பு செய்கின்றமை மற்றும் நீதிமன்ற உத்தரவை மீறி தொல்பொருள் திணைக்களத்தினர் விகாரை கட்டுமான பணியினை தொடர்ச்சியாக நடத்தி வருகின்றமையை எதிர்த்து நேற்று முன்தினம் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்

இந்தப் போராட்டத்தின் பின்னர் தொல்பொருள் திணைக்களத்தைச் சார்ந்தவர்கள் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் தங்களுடைய கடமைகளுக்கு இடையூறு விளைவித்ததாகவும் தங்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டதாகவும் தெரிவித்து முறைப்பாடு பதிவு செய்திருந்தனர்

இந்த முறைப்பாட்டின் பின்னணியில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் சமூக செயற்பாட்டாளர் இரத்தினராசா மயூரன் ஆகியோரை பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் நேற்று முன்னிலைப்படுத்தினர்,

இந்நிலையில், ஜனநாயக முறையில் போராட்டம் செய்தவர்களை கைது செய்தமைக்கு எதிராகவும் பொலிஸாரின் அராஜகத்திற்கு எதிராகவும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது

முல்லைத்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையத்திற்கு அருகாமையில் ஆரம்பமான இந்தக் கவனயீர்ப்புப் பேரணி முல்லைத்தீவு நகரம் ஊடாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் வரை இடம்பெற்றது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2023, 2025 ஆண்டுகளுக்கான டெஸ்ட் சம்பியன்சிப் தொடரின் இறுதி போட்டிகளுக்கான மைதானங்கள் அறிவிப்பு




உலக டெஸ்ட் சம்பியன் ஷிப் தொடரின் 2023 ஆம் மற்றும் 2025 ஆம் ஆண்டு பருவக்காலத்துக் கான தொடர்களின் இறுதிப் போட்டிகள் லண்டனிலுள்ள தி ஓவல் மற்றும் லோட்ஸ் மைதானங்களில் நடை பெற இருப்பதாக சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்து ள்ளது.

அந்த இரு உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடர்களை யும் இங்கிலாந்தில் நடத்து வதென, கடந்த ஜூலையில் பர்மிங்ஹாமில் நடைபெற்ற ஐ.சி.சி ஆண்டு பொதுக் கூட்டத்தின்போது முடிவு செய்யப்பட்ட நிலையில், தற்போது அவற்றின் இறுதி போட்டிகளுக்கான இடங்கள் இறுதி செய்யப்பட்டுள்ளன.

இரண்டாவது டெஸ்ட் சம்பியன்ஷிப் சுழற்சி கடந்த ஒகஸ்ட் 4 ஆம் திகதி தொட ங்கியிருக்கும் நிலையில், அடுத்த ஆண்டு மார்ச் 31 ஆம் திகதியுடன் நிறை வடைகிறது.

தற்போது வரையிலான புள்ளிகள் பட்டியலில் அவு ஸ்திரேலியா, தென்னா பிரிக்கா, இலங்கை அணி கள் முறையே முதல் 3 இடங்களில் உள்ளன.

இதேவேளை, கிரிக்கெட் உலகின் போர் என வர் ணிக்கப்படும் ஆண்கள் ஆஷஸ் டெஸ்ட் தொடர், எதிர்வரும் ஆண்டு ஜூன் 16 ஆம் திகதி எட்ஜ்பாஸ் டனில் ஆரம்பமாகும் என இங்கிலாந்து கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

ஐந்து டெஸ்டுகளில் கடைசி போட்டி ஜூலை 27 ஆம் திகதி ஓவல் மைதா னத்தில், இடையில் லோர் ட்ஸ், ஹெடிங்லி மற்றும் ஓல்ட் ட்ராஃபோர்ட் ஆகி யவை மூன்று போட்டிகளை நடத்துகின்றன.

இதற்கிடையில், பெண் கள் ஆஷஸ் ஜூன் 22 ஆம் திகதி டிரென்ட் பிரிட்ஜில் ஒரு ஐந்து நாள் டெஸ்ட் போட் டியுடன் தொடங்குகிறது. (4)

# இந்திய மண்ணில் அவுஸ்திரேலியா அணி 4 விக்கெட்டுகளால் வெற்றி



இந்திய அணிக்கு எதி ரான முதலாவது இரு பதுக்கு இருபது போட் டியில் அவுஸ்திரேலிய அணி 4 விக்கெட்டு களால் வெற்றி பெற்று ள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் நாணய சுழற்சியில் வெற் றிபெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் களத்த டுப்பில் ஈடுபட தீர்மானி த்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 ஓவர்கள் நிறைவில் 208 ஓட்டங் களை பெற்றுக்கொண் டது.

அவ்வணி சார்பாக ஹர்திக் பாண்டியா 71 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார்.

இதனை அடுத்து பதி லுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 19.2 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை மட்டும் இழந்து வெற்றி இலக்கை கடந்தது.


இப்போட்டியில் வெற்றி பெற்றுக்கொண்ட அவு ஸ்திரேலிய அணி 3 போட்டிகள் கொண்ட இரு பதுக்கு இருபது தொடரில் 1-0 என முன்னிலையில் உள்ளது. (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2703

### அபிராமி




### அஜந்தா




### நிதேஷ்




### கைலாஷ்




### கபிலா




### யுவதேஷ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30 வருடங்களின் பின் திருகோணமலை துறைமுகத்தில் இருந்து ஏற்றுமதி

(கொழும்பு)

திருகோணமலை துறைமுகம் 30 வருடங்களுக்கு பின்னர் தனது முதலாவது ஏற்றுமதியை நேற்று வியாழக்கிழமை மேற்கொண்டுள்ளது என இலங்கை துறைமுக அதிகார சபை அறிவித்துள்ளது.

இந்த முதல் ஏற்றுமதி கப்பலில் புல்மோட்டை கனிய மணல் லிமிடெட் நிறுவனத் துக்குச் சொந்தமான கனிய மணல் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.



குறித்த கனிய மணலை சீனாவிற்கு ஏற்றுமதி செய்துள்ளதாக இலங்கை துறைமுக அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது. (4)

# ஜப்பான், பிலிப்பைன்ஸிற்கு ஜனாதிபதி ரணில் பயணம்

(கொழும்பு)

ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர் வரும் 26 ஆம் திகதி ஜப்பான் செல்லவுள்ளார்.

ஜப்பானுக்கான விஜயத்தைத் தொடர்ந்து செப்டெம்பர் 29 ஆம் திகதி பிலிப்பைன்ஸில் நடைபெறவுள்ள ஆசிய வளர்ச்சி வங்கி ஆளுநர்கள் கூட்டத்தில் அவர் கலந்துகொள்வார் என எதிர் பார்க்கப்படுகிறது. (4)

# அரச ஊழியர்களின் ஆடை தொடர்பாக சுற்றுநிருபம் விரைவில்

(கொழும்பு)

அரச ஊழியர்கள் அலுவலகங்களுக்கு கடமைக்காக வருகை தரும் போது அலுவலகத்திற்கு பொருத்தமான உடைகளை அணிவது தொடர்பில் புதிய சுற்றுநிருபம் ஒன்று வெளியிடப்படவுள்ளது.


பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான அமைச்சின் செயலாளர் பிரியந்த மாயாதுன்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்கள் அலுவலகங்களுக்கு கடமைக்காக வருகை தரும்போது பெண்கள் சேலையும் கர்ப்பிணிப்பெண்கள் அவர்களுக்கு பொருத்தமான உடையையும் அணிய வேண்டும் என சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் ஆண்களுக்கு வெள்ளை நிற மேற்சட்டையும் கறுப்புநிற நீளக்காற்சட்டையையும் அலுவலக ஆடையாக பரிந்துரைக்கவும் சப்பாத்து அணிவதனை கட்டாயமாக்குவதற்கும் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாகவும் பிரியந்த மாயாதுன்ன தெரிவித்துள்ளார். (4)

# வளமான நாடாக இலங்கையை மாற்றுவதற்கு தொடர்ந்தும் ஆதரவு

## அமெரிக்கா உறுதி



(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு அமெரிக்கா தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என அமெரிக்க துணைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க துணைச் செயலாளர் Victoria Nuland தனது உத்தியோகப்பூர்வ டுவிட்டர் பக்க பதிவொன்றின் மூலம் குறித்த விடயத்தை பதிவேற்றியுள்ளார்.

அத்துடன் தற்போது அமெரிக்கா சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரிக்கும் அமெரிக்க துணைச் செயலாளருக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின்போது பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள நிலையில், இலங்கைக்கு தொடர்ந்து ஆதரவளிக்க அமெரிக்கா தயாராகவுள்ளதாக அமெரிக்க துணைச் செயலாளர் Victoria Nuland உறுதியளித்துள்ளார்.

இதனை தொடர்ந்து மேலும் சுதந்திரமான மற்றும் வளமான நாடாக இலங்கையை மாற்றுவதற்கு ஆதரவளிக்க ஒன்றிணைந்து செயற்படுவோம் என சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# முட்டையொன்றின் விலை 75 ரூபாய் வரை அதிகரிக்கும்

(கொழும்பு)

நாட்டில் எதிர்வரும் காலப் பகுதியில் முட்டையொன்றின் விலை 75 ரூபாய் வரை அதிகரிக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

இரசாயன உரத்துக்கு விதிக்கப்பட்ட தடை காரணமாக நாட்டில் முட்டை மற்றும் கோழிப் பண்ணை தொழில் பாரிய வீழ்ச்சி அடைந்துள்ளதாக தேசிய கால்நடைவள அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

தற்போதைய நிலையில் கோழிகளின் எண்ணிக்கை பாரியளவில் குறைவடைந்துள்ளதால் முட்டை மற்றும் கோழி இறைச்சித் தொழிற்துறையை மீள முன்னோக்கி கொண்டு செல்வதற்கு மேலும் காலம் எடுக்கும் என அந்தச் சபையின் தலைவர் பேராசிரியர் எச்.டபிள்யு. சிறில் தெரிவித்துள்ளார்.

வர்த்தக அமைச்சு முட்டைக்கான கட்டுப்பாட்டு விலையை அமுலாக்குவதற்கு முன்னர் கால்நடைவள அபிவிருத்தி சபையில் எவ்வித ஆலோசனைகளையும் பெறவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக எதிர்வரும் காலப்பகுதியில் முட்டையொன்றின் விலை 75 ரூபாய் வரை அதிகரிக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

# 600 மெ.தொன் அரிசியை வழங்கியது அவுஸ்திரேலியா

(கொழும்பு)

அவுஸ்திரேலியா இலங்கைக்கு 600 மெற்றிக் தொன் அரிசியை நன்கொடையாக வழங்கியுள்ளது.

இந்த அரிசியின் பெறுமதி சுமார் 15 மில்லியன் டொலர்களாகும் என்றும் இது எதிர்காலத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வழங்கப்படும் என்றும் அவுஸ்திரேலியா தெரிவித்துள்ளது.

இலங்கையுடன் தற்போதுள்ள உறவுகளை மேலும் விரிவுபடுத்தவும் எதிர்காலத்தில் இலங்கைக்கு ஆதரவை வழங்கவும் நம்புவதாகவும் அவுஸ்திரேலியா மேலும் தெரிவித்துள்ளது. (4)

# இராசிபலன்

23.09.2022
புரட்டாதி 06, வெள்ளிக்கிழமை
திரயோதசி பின்னிரவு 3.02 மணிவரை

மகம் பின்னிரவு 5.12 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை

பிரதோச விரதம்
சந்திராஷ்டமம் - திருவோணம்

வளவன்




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.




குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், நன்மைகள் நடைபெறும் நாள், புதிய பொருட்சேர்க்கையுண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.




அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், வழிபாட்டில் ஆர்வம் கூடும், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வருவர், பொது வாழ்வில் புகழ்கூடும் நாள்.




சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள்.




உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வழிபாடு காரிய வெற்றி தரும், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.




நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, கற்பனை மிகுதியான நாள்.




பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு.




மதி நுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.




உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், காரிய அனுகூலமுண்டு.




அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், வழிபாடு ஆனந்தம் தரும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




உடல் நலனில் இருந்த பாதிப்புக்கள் அகலும், எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

உனது கவலைதான் உன் மகிழ்ச்சியை திருடும் திருடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## புளி மூட்டைக்காரி

(நேற்றைய தொடர்ச்சி)

கனகவல்லி அவளைக் கண்டு பயப்படாமல் 'யார் நீ? வழியை விட்டு விலகு. நான் தலைநகரின் சந்தைக்குப் போயாக வேண்டும்' என்று அதிகாரத்தோடு கூறினாள். குள்ள ராட்சஸியும் 'நானும் உன்னோடு சந்தைக்கு வருகிறேன்.

இங்கே எல்லாரும் என்னைக் குள்ள ராட்சஸி என்று கேலி செய்கிறார்கள். கொஞ்ச நேரமாவது இவர்களது கேலிப் பேச்சைக் கேளாமல் சந்தோசமாக இருக்கிறேன்' என்றாள்.

கனகவல்லியும் "சரி ஆனால் உன்னை ஒரு சாக்குப் பையில் கட்டி வைத்துதான் வண்டியில் அழைத்துச் செல்வேன். நீ பார்க்கவும், மூச்சு விடவும் சாக்கில் ஓட்டைகள் செய்தும் விடுகிறேன். உன் பெயரென்ன?" என்று கேட்டாள். குள்ள ராட்சஸியும் "என் பெயர் ராஜகுமாரி. நீ கூறியபடியே என்னை சாக்குப் பைக்குள் கோட்டு ஓட்டைகளைச்செய்" என்றது.

கனகவல்லியும் அவளைச் சாக்கில் போட்டுக் கட்டி இருபுளி மூட்டைகளோடு வைத்தாள். தலைநகரில் சந்தைக்குப் போனதும் மூன்று மூட்டைகளை



யும் இறக்கி "புளி மூட்டை ஒன்று ஐம்பது ரூபாய்" என அவள் கத்தி விலை கூறினாள்.


அப்போது ஒருவன் பஞ்சுமிட்டாய் எனக் கத்தி விற்றுக் கொண்டு வரவே மூட்டைக்குள் இருந்த குள்ள ராட்சஸி "பஞ்சுமிட்டாயா? அது என்ன? எனக்கு வாங்கித்தா" என்றாள். கனகவல்லியும் "இரு, வாங்கி வருகிறேன்" என்று கூறி அடுத்தாற் போலிருந்த வெல்லக் கடை சிறுவனிடம் "இந்த மூட்டைகளைக் கொஞ்சம் பார்த்துக்கொள். நான் போய்ப் பஞ்சு மிட்டாய் வாங்கிக் கொண்டு வந்து விடுகிறேன்" என்று சொல்லி விட்டுப் போனாள். பஞ்சு மிட்டாய்க் காரன் வெகு தூரம் போய் விட்டதால் கனகவல்லி அவனைத் தேடிக் கொண்டு போய் மிட்டாய் வாங்கி வருவதற்குச் சற்று நேரமாகி விட்டது. ஆனால் வந்து பார்த்தபோது மூன்று மூட்டைகளும் இல்லாதது கண்டு அவள் திகைத்து நின்றாள்.

அப்போது வெல்லக் கடைக்காரப் பையன் அவளிடம் நூற்றைம்பது ரூபாய்களைக் கொடுத்து "உனக்கு சிரமமே இல்லாமல் உன் புளி மூட்டைகள் விற்றுப் போய் விட்டன பார்! அரச குமாரிக்குக் கல்யாணமாம். அதற்காகக் கிடைத்த புளியை அரசாங்க வீரர்கள் வாங்கிக் கொண்டு போய் விட்டார்கள்.

(தொடரும்)

# சிலப்பதிகாரம்

## சதிவலையில் கோவலன்




நான் மன்னரின் முடி உள்ளிட்ட ஆபரணங்களைச் செய்கிறவன். பெண்களின் ஆபரணங்கள் பற்றி எனக்குத் தெரியாது என்றான்.

பின் சரி பரவாயில்லை உன்னைப் பார்த்தால் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவனாகத் தெரிகிறாய். உனக்கு உதவி செய்வதில் எனக்கு மகிழ்ச்சிதான் உன்னிடம் உள்ள சிலம்பைக் காட்டு பார்க்கலாம்!' என்று பொற்கொல்லன் கேட்க கோவலன் அப்பாவியாகத் தன்னிடமிருந்த சிலம்பை அவனிடம் கொடுத்தான்.

பொற்கொல்லன் அதை வாங்கி உற்றுக் கவனித்துப் பார்த்தான் ஆனந்தத்தில் அவன் மனம் திக்குமுக்காடியது.

சந்தேகமே இல்லை . அச்சு அசல் அதேபோலத்தான் இருக்கிறது. அரசியின் சிலம்புக்குப் பதில் இதை மாற்றி வைத்தால் யாராலும் கண்டுபிடிக்க முடியாது.

பொற்கொல்லன் கோவலனை விசாரிக்க ஆரம்பித்தான். வியாபாரியே நீ யார்? எங்கிருந்து வருகிறாய்?

என் பெயர் கோவலன். சோழ நாட்டிலிருந்து வருகிறேன்.புகார் என்னுடைய ஊர். இந்தச் சிலம்பு உனக்கு எப்படிக் கிடைத்தது? இது என் மனைவியுடையது. எதற்காக இதைக் கொண்டு வந்தாய்?

'நான் வணிகக் குடும்பதைச் சேர்ந்தவன் நான் ஆரம்பிக்க இருக்கும் வியாபாரத்துக்கு முதலீடு தேவை. அப்படியானால் இந்தச் சிலம்பை விற்கவேண்டுமா? ஆமாம். இதை வாங்கத் தகுதியானவர் அரசியைத் தவிர வேறு யாரும் இருக்க முடியாது என்றான். அந்தப் பொற்கொல்லன் ஆகவே நீ இதை வேறு யாருக்கும் விற்கத் தேவையில்லை.

ஆனால் நான் எப்படி அரசரைச் சந்திப்பது? அதைப்பற்றி நீ கவலைப் படாதே அரசருக்கு என்னை நன்றாகத் தெரியும். நான் போய் அவரிடம் சொல்லி அனுமதி வாங்கிக்கொண்டு வருகிறேன்.

அதற்குப் பிறகு நீ அரண்மனைக்குப் போகலாம். அதுவரை சிலம்போடு என் வீட்டிலேயே இரு வேறு யாருக்கும் இதை விற்று விடாதே புரிந்ததா?

சரி ஐயா இரண்டடி நடந்த பொற் கொல்லனுக்கு ஒரு சந்தேகம் வந்தது.இந்தச் சிலம்பை விற்பதில் என்ன ஈடுபாடு என்று அவன் சந்தேகப்பட்டால் என்ன செய்வது? இது முழுக்க முழுக்க வியாபார நோக்கிலான செயல் என்று அவனை நினைக்க வைக்க வேண்டியது அவசியம் பொற்கொல்லன் திரும்ப கோவலனிடம் வந்தான். நாம் ஒரு விடயத்தை முன் கூட்டியே பேசிக் கொள்வது நல்லது என்றான்.

'என்னது ஐயா?' நான் எதற்காக இந்த வேலையை இத்தனை பொறுப்பாகச் செய்கிறேன் என்று நீ நினைக்கிறாய்? ஐயா நான் வணிகக் குடும்பத்தில் பிறந்தவன். வியாபாரம் என்றால் என்னவென்று எனக்குத் தெரியும் தரகு என்றால் என்னவென்றும் தெரியும். நல்லது நீ தரகாக எவ்வளவு தருவாய்?

நூற்றுக்கு இரண்டு தான் பொதுவான தரகுத் தொகை ஆனால் நான் நூற்றுக்கு ஐந்து தருகிறேன். பொற்கொல்லன் திருப்தி அடைந்தான். கம்பீரமாக அரண்மனையை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 83

**பிரெஞ்சு ஜனாதிபதியும் ஜேர்மன் ஜனாதிபதியும் மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினரை சமாதான நடவடிக்கைகளின் கீழ் கொண்டு வர பெப்ரவரி 7 அன்று ஒரு புதிய அமைதி திட்டத்தை முன் வைத்தனர். இது ஒப்பந்தம் மின்ஸ்க் II என்று அழைக்கப்பட்டது.**

பெலாரஸ் தலைநகர் மின்ஸ்கில் உள்ள சுதந்திர அரண்மனையில் பெப்ரவரி 11 அன்று பிராங்கோ-ஜேர்மன் இராஜதந்திர திட்டத்தை செயற்படுத்துவது பற்றி விவாதிக்க உச்சிமாநாடு நடத்த திட்டமிடப் பட்டது.

இதில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், உக்ரைன் ஜனாதிபதி பெட்ரோ போரோஷென்கோ, ஜேர்மன் ஜனாதிபதி ஏஞ்சலா மெர்க்கல், பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்சுவா ஹாலண்ட், தோனேஸ்க் மக்கள் குடியரசு தலைவர் அலெக்சாண்டர் ஜாகர்சென்கோ, லுகான்ஸ்க் மக்கள் குடியரசு தலைவர் இகோர் ப்ளாட்னிட்ஸ்கி ஆகியோர் கலந்து கொண்டனர். பேச்சுவார்த்தைகள் பதினாறு மணி நேரம் ஒரே இரவில் நடந்தன, மேலும் ஜேர்மன் வெளியுறவு அமைச்சர் இப் பேச்சிவார்த்தை "மிகவும் கடினமாக" இருந்ததாகக் கூறினார்.

பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, பெப்ரவரி 12 அன்று மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினர் சமாதான நடவடிக்கைகளின் புதிய ஒப்பந்தத்திற்கு ஒப்புக்கொண்டதாக அறிவிக்கப்பட்டது. மின்ஸ்க் ஒப்பந்தங்களைச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளின் தொகுப்பான, இது பொதுவாக மின்ஸ்க் II என்று அழைக்கப்பட்டது.

பெப்ரவரி 15 முதல் ஐரோப்பாவில் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்புக்கான அமைப்பின் பார்வையின் கீழ் நிபந்தனையற்ற போர் நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டது. முன் வரிசையில் இருந்து கனரக ஆயுதங்களை திரும்பப் பெறுதல், போர்க் கைதிகளை விடுவித்தல் மற்றும் உக்ரைனில் அரசியலமைப்பு சீர்திருத்தம் ஆகியவை ஒப்புக் கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகள் ஆகும். பொதுவாக "மின்ஸ்க் II" என குறிப்பிடப்படும் புதிய தொகுப்பு, "மிகவும் சிக்கலானது" மற்றும் "மிகவும் பலவீனமானது" மற்றும் தோல்வியுற்ற மின்ஸ்க் நெறிமுறைக்கு மிகவும் ஒத்ததாக இருப்பதால் விமர்சிக்கப்பட்டது.



11-12 பிப்ரவரி 2015 அன்று மின்ஸ்கில் நடந்த உச்சி மாநாட்டில் பெலாரஸ், ரஷ்யா, ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகளின் தலைவர்கள்

மின்ஸ்க் II அமுலுக்கு வந்ததில் இருந்து 100 இற்கும் மேற்பட்ட வீரர்கள் மற்றும் குறைந்தது 50 பொது மக்கள் கொல்லப்பட்டதாக உக்ரைனிய பாதுகாப்பு மந்திரி ஸ்டீபன் போல்டோராக் 8 ஜூன் 2015 அன்று தெரிவித்தார். அவரது கூற்றுப்படி, ரஷ்ய சார்புப் படைகள் 4,000 முறைக்கு மேல் போர் நிறுத்தத்தை மீறியுள்ளன என்றும் கூறினார்.

ஒப்பந்தத்திற்கு மாறாக, DPR பிரதிநிதி டெனிஸ் புஷிலின் மற்றும் LPR பிரதிநிதி விளாடிஸ்லாவ் டீனெகோ 10 ஜூன் 2015 அன்று தங்கள் குடியரசுகள் "ரஷ்யக் கூட்டமைப்பில் சேர விரும்புகின்றன" என்று தெரிவித்தனர். மேலும், மார்ச் 2014 இல் ரஷ்யாவால் இணைக்கப்பட்ட கிரிமியாவை ரஷ்யாவின் ஒரு பகுதியாக கருதுவதாக அவர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்க பாதுகாப்புத் துறை அதிகாரி மைக்கேல் கார்பெண்டர் 2 மார்ச் 2016 அன்று மின்ஸ்க் II கையொப்பமிட்டதில் இருந்து குறைந்தது 430 உக்ரைனிய வீரர்கள் இறந்துள்ளதாகவும் DPR மற்றும் LPR மீது ரஷ்யா "கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு இணைப்புகளை" பராமரித்து வருவதாகவும்; ரஷ்யா "கடுமையாக ஆயுதங்களை டான்பாஸில் கொட்டுகிறது" என்றும் கூறினார்.

(தொடரும்)

# இராணுவத்தை அணி திரட்ட ஜனாதிபதி புடின் உத்தரவு

(மொஸ்கோ)

**ரஷ்ய இராணுவத்தை அணி திரட்டவும் அச்சுறுத்தல் ஏற்பட்டால் எந்த எல்லைக்கும் செல்ல தயார் என ஜனாதிபதி புடின் அறிவித்துள்ளார்.**



மொஸ்கோ ரஷ்ய ஜனாதிபதி புடின் உத்தரவின்பேரில் கடந்த மார்ச் 24 ஆம் திகதியன்று உக்ரைனில் தொடங்கிய போரானது முடிவு ஏதும் எட்டப் படாமல் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

உக்ரைனும் தாக்குப்பிடித்து ரஷ்யாவை எதிர்கொண்டு வருகிறது. இந்நிலையில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இராணுவத்தை அணிதிரட்டல் தொடர்பான கோப்புகளை கையெழுத்திட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அதில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இராணுவத்தை அணி திரட்டலை அறிவித்தார்.

மேற்கு எல்லை கடந்து விட்டது. ரஷ்யாவை பலவீனப் படுத்தவும் பிரிக்கவும் அழிக்கவும் மேற்கத்தேய நாடுகள் முடிவு எடுத்துள்ளன.

ரஷ்யாவை பலவீனப்படுத்த மேற்கத்தேய நாடுகள் முயற்சி செய்கின்றன. பதிலடி கொடுக்க எங்களிடம் ஏராளமான ஆயுதங்கள் உள்ளன.

தங்கள் சொந்த எதிர்காலத்தை தீர்மானிக்க வீரர்களுக்கு ஆதரவு வழங்கப்படும். ரஷ்யாவிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் எந்த எல்லைக்கும் செல்ல நாங்கள் தயார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# ஆஸியில் கொத்துக் கொத்தாக கரை ஒதுங்கிய திமிங்கிலங்கள்



(கான்பெர்ரா)

அவுஸ்திரேலியா நாட்டின் டாஸ்மேனியா தீவில் உள்ள மேக்வாரி துறைமுகத்துக்கு அருகே உள்ள கடற்கரையில் நேற்று முன்தினம் 200 இற்கும் அதிகமான திமிங்கிலங்கள் கரை ஒதுங்கின.

ஒரே நேரத்தில் கொத்துக் கொத்தாக திமிங்கிலங்கள் கரை ஒதுங்கியது அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அவற்றில் பாதிக்கும் அதிகமான திமிங்கிலங்கள் இன்னும் உயிருடன் இருப்பதாக நம்பப்படுகிறது.

எனவே அவற்றை மீட்டு மீண்டும் கடலுக்குள் விடுவதற்கான முயற்சிகளில் கடற்படையினரும் தன்னார்வலர்களும் ஈடுபட்டுள்ளனர்.

எனினும் திமிங்கிலங்கள் கரை ஒதுங்கியுள்ள இடம் சிக்கலான பகுதியாக இருப்பதால் மீட்பு குழுக்களால் உடன்டியாக அங்கு செல்ல முடியவில்லை என்று கூறப்படுகிறது.

கடந்த 2020 ஆம்ஆண்டு செப்டெம்பர் மாதம் இதே டாஸ்மேனியா தீவு கடற்கரையில் 500 இற்கும் அதிகமான திமிங்கிலங்கள் கரை ஒதுங்கின.

அவற்றில் சுமார் 100 திமிங்கிலங்கள் மட்டுமே உயிர் பிழைத்தன. (4)

# ராணியின் இறுதிச்சடங்கில் பங்கேற்ற டென்மார்க் ராணிக்கு கொரோனா

(கோபன்ஹேகன்)

மறைந்த இங்கிலாந்து ராணி இரண்டாம் எலிசபெத்தின் இறுதிச்சடங்கு கடந்த 19 ஆம் திகதி லண்டனில் நடந்தது. இதில் டென்மார்க் ராணி இரண்டாம் மார்கரெட் நேரில் கலந்து கொண்டு ராணி எலிசபெத்துக்கு அஞ்சலி செலுத்தினார். அதைத் தொடர்ந்து நாடு திரும்பிய அவருக்கு கொரோனா பரிசோதனை நடத்தப்பட்டது.

அதில் அவருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டிருப்பது உறுதியானது. 50 ஆண்டு காலம் ராணியாக உள்ள அவர் அரசு நிகழ்ச்சிகளை இரத்து செய்துள்ளார். ஏற்கனவே அவருக்கு கடந்த பெப்ரவரி மாதம் கொரோனா தாக்கி மீண்டு வந்தார்.



அவர் 3 'டோஸ்' தடுப்பூசிகளை போட்டுக் கொண்டுள்ள நிலையில் இப்போது கொரோனா தாக்கி இருப்பது உறுதிப்படுத்தது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

## 18.09.2022 - 17.10.2022

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**மற்றவர்களுக்கு உதவும் எண்ணத்தை மனதில் பதித்து வைத்துள்ள துலாம் இராசி வாசகர்களே!**

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் விரயாதிபதி புதனுடன் சஞ்சரிப்பதால் வருமானம் திருப்திகரமாக இருந்தாலும் செலவு இருமடங்காகும். அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது.

### கன்னி - சுக்கிரன் சஞ்சாரம்

புரட்டாதி 8 ஆம் திகதி கன்னி இராசிக்குச் செல்லும் சுக்கிரன், அங்கு நீசம் பெறுகிறார். உங்கள் இராசி நாதன் நீசம்பெறுவதால் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். உடன் இருப்பவர்களின் ஒத்துழைப்பு குறையும். வீடு மாற்றங்களும் விரும்பத்தகாத விதத்தில் அமையும். அதே நேரத்தில் அஷ்டமாதிபதியாகவும் சுக்கிரன் விளங்குவதால் ஒரு சில காரியங்கள் எதிர்பாராத வகையில் நல்ல விதமாக முடியும். எதிர்மறை சிந்தனைகளை தவிர்ப்பது நல்லது.

### கன்னி - புதன் சஞ்சாரம்

புரட்டாதி 16 ஆம் திகதி கன்னி இராசிக்குச் செல்லும் புதன் அங்கு உச்சம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் உச்சம்பெறும் பொழுது நன்மையும் தீமையும் கலந்தே நடைபெறும். பாக்கிய ஸ்தானத்திற்கு அதிபதியாக புதன் விளங்குவதால் பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் எடுத்த முயற்சி வெற்றி தரும். பஞ்சாயத்துக்கள் சாதகமாக முடியும். வீட்டைப் பழுதுபார்ப்பது விவசாயத்தைக் கவனிப்பது போன்றவற்றில் ஈடுபடுவீர்கள்.

## எதிர்மறைச் சிந்தனைகளைத் தவிர்ப்பது நல்லது!

### மிதுன - செவ்வாய் சஞ்சாரம்

புரட்டாதி 22 ஆம் திகதி, மிதுன இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய் பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது அசையாச் சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் கூடும். கடன்சுமை குறையும். அதிகார வர்க்கத்தில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும். மிதுன செவ்வாய் மகரச் சனியைப் பார்ப்பதால் பய உணர்ச்சி ஏற்படும். இந்த காலகட்டத்தில் எதிர்மறை சிந்தனைகளை வளரவிடாமல்




பார்த்துக் கொள்ளுங்கள். இக்காலத்தில் வரும் திருமணப் பேச்சுக்கள் நிலையானதாக இருக்காது. நீங்கள் விழிப்புணர்ச்சியுடன் இருந்தாலும் ஒரு சில ஏமாற்றங்களைச் சந்திக்கத்தான் வேண்டும்.

### சனி வக்கிர நிவர்த்தி

புரட்டாதி 23 ஆம் திகதி, சனி வக்கிர நிவர்த்தியாகிறார். அப்பொழுது அர்த்தாஷ்டமச் சனி பலம் பெறுகிறார். எனவே எதிலும் கவனமுடன் செயற்படுவது நல்லது. குறிப்பாக ஆரோக்கியத் தொல்லைகளும் மருத்துவச் செலவுகளும் உண்டு. உள்ளத்தில் நினைத்ததை உடனடியாகச் செய்ய இயலாது. கட்டுப்பாட்டில் இருந்த கடன் சுமை கைமீறிச் செல்லும். அனுசரித்துச் செல்வதன் மூலமே அன்றாட வாழ்க்கை நன்றாக அமையும். இம்மாதம் துர்க்கை வழிபாடு துயரங்களைப் போக்கும்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதத் தொடக்கத்தில் பொருளாதாரம் திருப்தியாக இருந்தாலும் மாதத்தின் மையத்தில் பணப்பற்றாக்குறை அதிகரிக்கும். அர்த்தாஷ்டமச் சனி பலம்பெறும் இந்த நேரத்தில் ஆரோக்கியத் தொல்லை ஏற்படும். அருகில் இருப்பவர்களின் அனுசரிப்பு குறையும். கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடு உண்டாகும். பணி புரியும் பெண்கள் பொறுப்புகளை மற்றவர்களிடம் ஒப்படைத்தால் பிரச்சினைகள் உருவாகும்.



**நினைத்ததை நினைத்த மாத்திரத்தில் செய்து முடிக்க நினைக்கும் விருச்சிக இராசி வாசகர்களே!**

புரட்டாதி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசிநாதன் செவ்வாய் உங்கள் இராசியைப் பார்க்கிறார். தொழில் ஸ்தானாதிபதி சூரியனும் இலாபாதிபதி புதனும் பரிவர்த்தனை யோகம் பெற்றிருக்கிறார்கள். எனவே நிதி நிலை உயரும். நினைத்த காரியம் நிறைவேறும்.

## சொத்துக்கள் வாங்குவதில் அக்கறை காட்டுவீர்கள்

### கன்னி - சுக்கிரன் சஞ்சாரம்

புரட்டாதி 8 ஆம் திகதி கன்னி இராசிக்குச் செல்லும் சுக்கிரன், அங்கு நீசம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். 12 இற்கு அதிபதி நீசம் பெறுவது நன்மைதான். விரயாதிபதி நீசம் பெறுவதால் விரயங்கள் குறையும். வீடு மாற்றம், நாடு மாற்றத்திற்கான அறிகுறி தென்படும். மேலதிகாரிகள் உங்கள் கருத்துக்களை ஏற்றுக் கொள்வர். அதே நேரம் சப்தமாதிபதியாகவும் சுக்கிரன் விளங்குவதால், குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது.

### கன்னி - புதன் சஞ்சாரம்

புரட்டாதி 16 ஆம் திகதி கன்னி இராசிக்குச் செல்லும் புதன், அங்கு உச்சம் பெறுகிறார். இது ஒரு பொற்காலமாகும். இலாபாதிபதி புதன் உச்சம் பெற்று தொழில் ஸ்தானாதிபதி சூரியனுடன் இணைந்திருக்கிறார். குருவின் பார்வை அவர்கள் மீது பதிவதால், தொட்ட காரியங்கள் வெற்றியாகும். உத்தியோகத்தில் சம்பள உயர்வு, பதவி உயர்வு ஏற்படும். தொழில் தொடங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

### மிதுன - செவ்வாய் சஞ்சாரம்

புரட்டாதி 22 ஆம் திகதி மிதுன இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிநாதன் மற்றும் 6 ஆம் இடத்திற்கு அதிபதியாக விளங்குபவர் செவ்வாய். 6 இற்கு அதிபதி 8 இல் சஞ்சரிக்கும் பொழுது "விபரீத ராஜயோகம்" செயற்படும். எனவே திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். குரு பார்வையும் உங்கள் இராசியில் பதிவதால் தொழில் வளர்ச்சி




சிறப்பாக இருக்கும். இக்காலத்தில் சனியை செவ்வாய் பார்க்கும் சூழல் ஏற்படுவதால், எதிர்மறைச் சிந்தனைகள் அடிக்கடி வந்து அலை மோதும். மனக்குழப்பம் உருவாகும். ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவதன் மூலம் ஆரோக்கியத்தை சீராக்கிக் கொள்ளலாம். எதையும் ஒரு முறைக்கு இரு முறை சிந்தித்துச் செயற்படுங்கள்.

### சனி வக்கிர நிவர்த்தி

புரட்டாதி 23 ஆம் திகதி, சனி வக்கிர நிவர்த்தியாகிறார். இக்காலம் ஒரு இனிய காலமாகவே அமையும். சகாய ஸ்தானாதிபதி பலம்பெறுவதால் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். இல்லம் தேடி இனிய தகவல் வந்து சேரும். சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். துணிவும் தன்னம்பிக்கையும் கூடும். குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். மனை கட்டுவது, இடம் வாங்குவது, வாகனங்கள் வாங்குவது, ஆபரண சேர்க்கை போன்றவற்றில் அதிக அளவில் ஆர்வம் காட்டுவீர்கள். இம்மாதம் சரஸ்வதி வழிபாட்டால் சந்தோசங்கள் வந்து சேரும்.

### பெண்களுக்கான பலன்கள்

இம்மாதம் உங்கள் இராசியில் குருவின் பார்வை பதிவதால் சுப செய்திகள் வந்த வண்ணம் இருக்கும். துணிந்து சில முடிவுகளை எடுத்து வெற்றி பெறுவீர்கள். வசதி வாய்ப்புகள் அதிகரிக்கும். கணவன் - மனைவிக்குள் அன்பும் ஆதரவும் கூடும். அசையாச் சொத்துகள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு மேலிடத்து ஆதரவு அமைவதோடு கேட்ட சலுகைகளும் கிடைக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் முன்னேற்றப் பாதையில் செல்வதே நம்மவர்களையும் முன்னேறச் செய்ய சிறந்த வழி.
– ஸ்ரீ அன்னை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பிரதேச செயலகங்கள் மனம் வைத்தால்...

தமிழ் மக்களின் அரசியல் விவகாரம் பற்றிப் பேசி எந்தப் பிரயோசனமும் இல்லை என்பது நிறுதிட்டமான உண்மை.

ஆம், அரசியல் என்றாலே வெறுப்பாயிற்று. உண்மை. யாரையெல்லாம் நம்பினோமோ அவர்கள் எல்லாம் சுயநலத்தின் வடிவங்கள் என்பதை அறிந்து கொண்டோம்.

உண்மையைக் கூறப்போனால் தமிழ் அரசியல் தரப்பை நம்பி தமிழ் மக்கள் அழிந்து போனதுதான் மிச்சம்.

ஆகையால் இனி அரசியல் பற்றிப் பிரஸ்தாபித்து நேரத்தை வீணாக்காமல் பார்த்துக் கொள்வது புத்திசாலித்தனம் என்றளவில் அந்த விடயத்தை அப்படியே விட்டுவிடலாம்.

மாறாக எங்கள் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள், அவர்களுக்கு உதவக்கூடிய வழிவகைகளைப் பற்றிச் சிலாகிப்பது பயனுடையதாக இருக்கும் என்ற நம்பிக்கை உண்டு.

ஆயினும் சில இடங்களில் அந்த நம்பிக்கையும் தோல்விகண்டு விடுகிறது.

உதாரணத்துக்கு தெருநாய்களை பிடித்து நாய்கள் காப்பகத்தில் ஒப்படைக்கின்ற காரியத்தைச் செய்ய வேண்டுமென்று இவ்விடத்தில் கோரிக்கை விட்டிருந்தோம். ஆனால் அது நடந்தாகவில்லை.

யாதேனும் ஒரு பிரதேச சபை அல்லது மாநகர சபை முன்வந்து தெரு நாய்களைப் பிடித்து நாய்கள் காப்பகத்தில் ஒப்படைக்குமாக இருந்தால், நிச்சயம் ஏனைய உள்ளூராட்சி அமைப்புகள் களத்தில் இறங்கி தெரு நாய்களுக்கு முடிவு கட்டும்.

என்ன செய்வது அங்கும் தமிழ் அரசியல் தாண்டவமாடுவதால், எதுவும் செய்யமுடியவில்லை.

பரவாயில்லை. அது ஒருபுறமிருக்க, இப்போது வாகன வரி கட்டத்தவறியதால், 3ஆம் நபர் காப்புறுதிப் பத்திரம் காலாவதியானதால், சாரதி அனுமதிப்பத்திரம் புதுப்பிக்காததால் தண்டப்பணம் செலுத்துவோரின் எண்ணிக்கை பன்மடங்காயிற்று.

எங்கு பார்த்தாலும் மோட்டார் சைக்கிள்கள் உள்ளிட்ட வாகனங்களை இடைமறித்து பொலிஸார் தண்டம் விதிக்கின்றனர்.

நாளாந்தம் கூலி வேலைக்குச் சென்று 2000 ரூபாயை உழைக்கின்ற ஒருவர் வாகன வரிப்பத்திரம் காலாவதியானதற்காக, 3000 ரூபாயைத் தண்டமாகச் செலுத்துகிறார் எனில், எங்களின் அறியாமையை, கவனயீனத்தை என்னவென்று சொல்வது.

அந்தோ! இந்த அவலநிலையில் இருந்து மக்களைப் பாதுகாக்க; உங்களின் வாகன வரிப்பத்திரம் செல்லுபடியாகும் காலம் அடுத்த வாரம் முடிவடைகிறது.

வரிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள் என்று ஒரு குறுஞ்செய்தியை அவரவர் தொலைபேசிகளுக்கு பிரதேச செயலக மோட்டார் வாகனப்பிரிவு அனுப்பி வைக்குமாயின்,

அதே பணியை சம்பந்தப்பட்ட காப்புறுதி நிறுவனங்களும் செய்யுமாயின், உரிய காலத்தில் வாகன வரிப்பத்திரத்தையும் காப்புறுதிப் பத்திரத்தையும் பொதுமக்கள் எடுத்துக் கொள்வர்.

இதுவிடயத்தில் பிரதேச செயலகங்கள் மனம்வைத்தால் சாதாரண மக்களின் உடல் உழைப்பின் ஊதியம் தண்டப்பணமாகப் பறிபோகும் பரிதாபத்தில் இருந்து அவர்களைப் பாதுகாக்க முடியும்.

## ஓய்வூதிய வயதை 60 ஆக மாற்றினால் 249 விசேட மருத்துவர்கள் ஓய்வு

### அமைச்சர் கெஹெலிய

(கொழும்பு)

அரச ஊழியர்களின் ஓய்வூதிய வயதை 60 ஆக மாற்றியமையினால் 9 வீதமான விசேட மருத்துவர்கள் இந்த வருட இறுதிக்குள் ஓய்வு பெறவுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, விசேட மருத்துவர்கள் குழுவொன்று ஒரேயடியாக ஓய்வு பெறுவதனால் சுகாதாரத் துறையின் முகாமைத்துவம் மற்றும் சேவைகளை வழங்குவதில் சிக்கல் நிலை உருவாகலாம் என கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த சுகாதார அமைச்சர், இது இளம் மருத்துவர்களுக்கு சாதகமான பின்னணியை உருவாக்கும் என குறிப்பிட்டார்.

இதன்போது மேலும் உரையாற்றிய சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல, "இலங்கையின் மருத்துவமனை அமைப்பில் தற்போது 2,278 விசேட மருத்துவர்கள் கடமையாற்றி வருவதுடன் கட்டாய ஓய்வுபெறும் வய்து 60 என்பதனால் விசேட அதிகாரிகள் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள் பின்வருமாறு ஓய்வுபெற உள்ளனர்.

அதன்படி, 222 சிறப்பு மருத்துவ அதிகாரிகள் மற்றும் 27 நிர்வாக மருத்துவ அலுவலர்கள் என மொத்தம் 249 பேர் இந்த ஆண்டு இறுதியில் ஓய்வு பெறவுள்ளனர்.

ஒரு சதவீதமாக, சிறப்பு மருத்துவ அதிகாரிகளின் எண்ணிக்கையில் சுமார் 9 வீதமான பேர் ஓய்வு பெறப்போகிறார்கள். எனவே காலியாக உள்ள மருத்துவமனைகள் மற்றும்நிறுவனங்களின்பாடப் பகுதிக்கு ஏற்ப உள் இட மாற்ற முறையை சமநிலைப்படுத்துவது சாத்தியமாகும்.

கூடுதலாக, 5 வருட வெளிநாட்டு விடுப்பு முறையின் கீழ், மேலும் 3 வீத மருத்துவர்கள் வெளிநாடு செல்ல முடியும். அதே எண்ணிக்கை பொது மருத்துவ பதவிகளை உள்ளடக்கிய அமைப்பின் கீழ் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டுப் பயிற்சிக்காக அரசாங்கம் வருடத்திற்கு நிறையப் பணத்தைச் செலவிடுகிறது. மேலும் பயிற்சி பெறும் அதிகாரிகள் கட்டாய சேவைக் காலத்திற்கு உட்பட்டுள்ளனர்.

எனவே, ஓய்வுபெறும் வயதை 60 ஆக மாற்றியமை இத்துறையில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவதாகத் தெரிகிறது.

ஏனெனில் இது இளம் மருத்துவர்கள் தங்களுக்கு விருப்பமான பதவிகளைப் பெறவும் உள்நாட்டில் தகுதி வாய்ந்த மருத்துவர்கள் பதவி உயர்வு பெறவும் வாய்ப்பளிக்கிறது" என மேலும் தெரிவித்துள்ளார். (4)

## பரு.நகரசபை முன்பாக நீதி கோரி வர்த்தகர் போராட்டம்

(கரணவாய்)

தனக்கு அநீதி இழைக்கப்படுவதாக தெரிவித்து பருத்தித்துறை வீ.எம் வீதியைச் சேர்ந்த ஒருவர் நேற்று முன்தினம் பருத்தித்துறை நகரசபை முன்றலில் அவரது குடும்ப சகிதம் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

இது குறித்து போராட்டத்தில் ஈடுபட்டவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தமக்கு பாதிப்பான முறையில் அயல் வீட்டுக்காரர் ஒருவர் கட்டடம் ஒன்றினை அமைத்து வருவதாகவும் அது தொடர்பில் பருத்தித்துறை நகரசபைக்கு முறையிட்டதாகவும் அதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் நகரசபையால் எடுக்கப்படாத நிலையில் தாம் மீண்டும் மீண்டும்பலமுறைப்பாட்டை செய்ததாகவும் ஆனால் நகரசபை எந்தவிதமான நடவடிக்கையும்எடுக்காத நிலையிலேயே நேற்று குடும்ப சகிதம் தாம் போராட்டத்தில் ஈடுபட்டதாக தெரிவித்தார்.

இது தொடர்பில் பருத்தித்துறை நகரசபை தவிசாளர் இருதயராசாவிடம் கேட்டபோது போராட்டத்தில் ஈடுபடும் நபரால் தமக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கு அமைவாக தாம் தமது சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதாகவும் தெரிவித்தார். (4-60)

## சிறுவர்களிடையே மீண்டும் பரவும் தொற்று நோய்

(கொழும்பு)

சிறுவர்களிடையே மீண்டும் கை, கால் மற்றும் வாய்களில் தொற்று பரவுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு சீமாட்டி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா இந்த எச்சரிக்கையினை விடுத்துள்ளார்.

காய்ச்சலுடன் அல்லது காய்ச்சல் இன்றி சிறுவர்களின் கை, கால் மற்றும் வாயைச் சுற்றி சிவப்பு நிறத்தில் தழும்புகள் அல்லது வெள்ளை நிற கொப்புளங்கள் ஏற்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெற்றோர் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார்.

6 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கே இந்த தொற்று ஏற்படுவதால், அவ்வாறான கொப்புளங்கள் மற்றும் தழும்புகள் காணப்படுமாயின் பிள்ளைகளை வெளி இடங்களுக்கு அனுப்பாது சில நாட்கள் வரை வீடுகளில் வைத்திருக்குமாறும் பெற்றோருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (4)

## திலீபனின் நினைவேந்தல் எழுச்சிபூர்வமாக நடைபெறும்

### யாழ்.மாநகர முதல்வர் தெரிவிப்பு

(குப்பிழான்)

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் இம்முறை எழுச்சிபூர்வமாக நடைபெறும் என யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களை விட இம்முறை நிலைமை சற்றுச் சீராகக் காணப்படுவதால் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலை இம்முறை எழுச்சியாக நினைவுகூருவதற்கு தீர்மானித்துள்ளோம்.

இது தவிர சில தரப்புக்கள் நினைவேந்தல்களை மேற்கொள்ள விடமாட்டார்கள், குழப்புவார்கள். ஆகவே இம்முறையும் குழப்பம் வரலாம். அதற்கான வேலைகளை அரசு தரப்பு மேற்கொண்டுள்ளது.

கடந்த காலங்களில் உள்ள அரசு வேறு ஒரு வழியைக் கையாண்டது. இம்முறை உள்ள அரசு குழப்புவதற்காக கும்பல்களை ஏவி விடும் வாய்ப்புகள் உள்ளது.

ஆகவே, இவற்றை எல்லாம் கடந்து எழுச்சியாக இந்த நினைவேந்தல் நிகழ்வுகளை மேற்கொள்வோம் எனவும் அவர் தெரிவித்தார். (4-18)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை [illegible] பிரதேசத்தில் சிறு [illegible] (சிலாவத்துறை), சிலாவத்துறை கடற்படை முகாம், அகத்திமுறிப்பு, அகத்திமுறிப்புத் திட்டம், அளவக்கை சிறுகுளம் திட்டம், அரிப்பு, அரிப்பு நீர்வழங்கல், ஆத்திமோட்டை, ஹனைஸ் நகர், கரடிக்குழி, [illegible] திட்டம், கொக்குப்படையான், கொண்டச்சி திட்டம், கொண்டச்சி நீர் வழங்கல்சபை, கொண்டச்சி சிங்கள கிராமம், கூழாங்குளம், கூழாங்குளம் திட்டம் (ஜீநாத் நகர்), மடுக்கரை, மணற்குளம், மறிச்சுக்கட்டி, மருதமடு, மேதன் வெளி, முள்ளிக்குளம், முசலி தேசிய பாடசாலையடி, பெரிய பொள்ளாச்சிபொற்கேணி, பாலைக்குழி, பாலைக்குழி திட்டம், பரிகாரிக்கண்டல், பெரிய பொள்ளாச்சி பொற்கேணி (பண்டாரவெளி), பிச்சைகுளம், பிச்சை வாணிபங்குளம் திட்டம், பொன்தீவு கண்டல் கள்ளிமோட்டை புளியங்குளம், பொன்னாச்சிகுளம், புதுக்காமம் கிராமம், புதுக்குடியிருப்பு (சிலாவத்துறை), புதுவெளி, சின்ன பொள்ளாச்சி பொற்கேணி திட்டம், சிலாவத்துறை, சின்ன பொள்ளாச்சி பொற்கேணி, தம்பட்ட முசலி, வெள்ளிமலை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படைடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருந்தூர் மலை விவகாரம்

# யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம்




(யாழ்ப்பாணம்)

குருந்தூர்மலைப் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பாக கைது செய்யப்பட்ட து.ரவிகரன் மற்றும் இ.மயூரனை விடுவிக்க கோரியும் பௌத்தமயமாக்கலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களால் நேற்றைய தினம் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக பிரதான நுழைவாயிலுக்கு முன்பாக ஒன்றுகூடிய பல்கலைக்கழக மாணவர்கள் அங்கிருந்து கோஷங்களை எழுப்பியவாறு பேரணியாக இராமநாதன் வீதி ஊடாக பரமேஸ்வராச் சந்தியை அடைந்து, சிறிது நேரம் வீதியை முடக்கி போராட்டத்தில் ஈடுபட்டதுடன்பின்னர்பேரணியாக பல்கலைக்கழகத்தை வந்தடைந்தனர்.(4-18-33-104)



நல்லூர் மாநகரசபை பிள்ளைக் கனியமுதம் முன்பள்ளியில் கடந்த 16 ஆம் திகதி அன்று இவ்வாண்டு மாணவர்களுக்கான மாதிரி முன்பள்ளிச்சந்தை நிகழ்வு ஆசிரியர்களான ஜெபநேசன் ஏஞ்சலின், கஜன் கீர்த்திகா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வை மாநகர ஆணையாளர் ஜெயசீலன் ஆரம்பித்து வைத்தார்.

## தனியார் நெடுந்தூர பேருந்துகள்

# இன்று முதல் புதிய நெடுந்தூர பேருந்து நிலையத்தில் இருந்து புறப்படும்

(யாழ்ப்பாணம்)

தனியாரின் நெடுந்தூர (கொழும்பு) பேருந்துகள் இன்று முதல் முனீஸ்வரன் வீதியிலுள்ள (புல்லுக்குளம் முன்பாக) புதிய நெடுந்தூர பேருந்து நிலையத்திலிருந்து புறப்பட்டு செல்லும் என யாழ்.மாநகரசபை அறிவித்துள்ளது.

தொல்பொருள் திணைக்களம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையுடனும் யாழ்.பொலிஸ் பிரிவுடனும் இணைந்து மாநகர சபை இவ் நடைமுறையை ஒழுங்குபடுத்தியுள்ளது.

மேலும் இன்று முதல். கோட்டைப் பகுதியில் நிறுத்தி வைக்கப்படும் நெடுந்தூர (கொழும்பு) பேருந்துகள் அனைத்தும் இடுகாட்டு வீதியிலுள்ள MPCS காணியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தரிப்பிடத்திலேயே தரிக்க வேண்டும்.

அத்துடன் கோட்டைப் பகுதியில் இன்று முதல் தரித்து நிற்கும் பேருந்துகளுக்கு தண்டப்பணம் அறிவிடுவதும் சட்ட நடவடிக்கை எடுப்பதும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என மேலும் தெரிவித்துள்ளது. (4)

## விழிநீர் அஞ்சலி

அமரர்.

### கந்தையா புனிதரத்தினம்



எமது கல்லூரியின் வணிகக்கல்வி ஆசிரியர் திருமதி.பாலபுத்திரன் சுகிர்தா அவர்களின் பாசமிகு தந்தையான **அமரர்.கந்தையா புனிதரத்தினம்** அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு துயரடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

(12862)

பிறப்பு :- 1947.10.15

இறப்பு :- 2022.09.22

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி



இலங்கை விமானப்படையின் குண்டு வீச்சினால் நாகர்கோவில் மகா வித்தியாலயத்தில் படுகொலை செய்யப்பட்ட 22 மாணவர்களின் 27 ஆவது நினைவு அஞ்சலி நிகழ்வுகள் நேற்று நடைபெற்றது.

(படங்கள்: மகாலிங்கம்)

# அனுமதியின்றி மணல் ஏற்றிய ஐவர் பொலிஸாரால் கைது



(தருமபுரம்)

தருமபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணை, கல்மடு, கல்லாறு போன்ற பகுதிகளில் மணல் அகழ்வில் ஈடுபடுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய ஐந்து டிப்பர்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் அதன் சாரதிகளும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் விசாரணைகளின் பின்னர் பொலிஸாரால் விடுவிக்கப்பட்டதுடன் டிப்பர் வாகனங்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி [illegible] தெரிவித்தார். (4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 260 | 300 | 280 | 280 |
| உருளைக்கிழங்கு | 300 | 280 | 280 | 280 |
| பச்சைமிளகாய் | 200 | 250 | 250 | 250 |
| தக்காளி | 100 | 160 | 180 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 260 | 200 |
| கோவா | 400 | 400 | 430 | 450 |
| கரட் | 350 | 350 | 400 | 440 |
| பூசணி | 130 | 120 | 120 | 200 |
| புடோல் | 120 | 180 | 120 | 200 |
| வாழைக்காய் | 180 | 160 | 130 | 140 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 350 | 350 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 180 | 180 |
| பாகற்காய் | 600 | 800 | 600 | 800 |
| வெண்டக்காய் | 140 | 200 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 180 | 200 | 200 | 240 |
| பயற்றங்காய் | 200 | 200 | 220 | 120 |
| லீக்ஸ் | 250 | 250 | 300 | 300 |
| பீற்றூட் | 180 | 160 | 200 | 250 |
| கறிமிளகாய் | 750 | 700 | 650 | 700 |
| முருங்கைக்காய் | 500 | 400 | 500 | 450 |
| போஞ்சி | 600 | 500 | 500 | 500 |
| கத்தரிதம்புள்ள | 220 | 250 | --- | 250 |
| கீரை – 1 பிடி | 100 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 200 | 300 | 380 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 75 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 250 | 350 | 350 | 400 |
| முள்ளங்கி | 120 | 180 | 120 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 50 |
| வல்லாரை | 25 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 80 | 120 | 100 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிச்சலுகை...

கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆய்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர், சர்ச்சைக்குரிய வரி செலுத்தாமை தொடர்பில் ஆராய்வதற்கு முன்னுரிமை வழங்கப்படும் என மேலும் குறிப்பிட்டார். (ம-7)

## மின்வெட்டு...

கொள்ள இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இலங்கை மின்சார சபைக்கு அனுமதி வழங்கியுள்ளது.

பழைய லக்ஷபான அனல்மின் நிலையத்தின் 1ஆம் நிலை இயங்காமை, வெஸ்ட் கோஸ்ட் மின் நிலையத்தில் மின் உற்பத்திக்கான எரிபொருள் பற்றாக்குறை மற்றும் மின்சாரத் தேவை திடீரென அதிகரித்தமை ஆகியவை இதற்கு காரணமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, A,B,C,D,E,F,G,H,I,J,K, L,P,Q,R,S,T, U,V,W ஆகிய வலயங்களுக்கு பிற்பகல் வேளையில் ஒரு மணி நேரம் மின்வெட்டு மேற்கொள்ளப்படவுள்ளது.

அந்த வலயங்களுக்கு இரவு வேளையில் ஒரு மணி நேரம் 20 நிமிடம் மின்வெட்டு மேற்கொள்ளப்படவுள்ளது.(ம-7)

## சாரதி அனுமதிப்...

வரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் ஆலோசனைக் குழு இதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

இந்தக் கட்டளைகளின் ஊடாக சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடியாகும் காலம் தற்காலிகமாக நீடிக்கப்படும்.

அதன்படி, இந்தக் கட்டளைகள் எதிர்காலத்தில் பாராளுமன்ற அனுமதிக்கு முன்வைக்கப்படவுள்ளன.

மேலும், இந்தக் குழுவில் உள்நாட்டு கார் உற்பத்தியை மேம்படுத்துவது குறித்து ஆராயுமாறும் அதிகாரிகளுக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார். (ம-7)

## இறுதி உடன்பாடு...

எட்டவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

சபாநாயகர் மூலமாக ஜனாதிபதி இதனை பாராளுமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்துடன் பேச்சுவார்த்தைகள் தொடர்கின்றன என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

பணியாளர் மட்ட உடன்படிக்கை மாத்திரம் சாத்தியமாகியுள்ளது. சர்வதேச நாணயநிதியத்தின் நிறைவேற்று குழு அதற்கு அனுமதி வழங்கவில்லை என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இறுதி உடன்படிக்கை சாத்தியமானதும் அமைச்சரவைக்கு அறிவிக்கப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் குறித்து அமைச்சரவைக்குக்கூட தெரிவிக்கவில்லை என ஜனாதிபதி தனக்கு தெரிவித்துள்ளார் என சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாணயநிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் பூர்த்தியடைந்ததும் எதிர்க்கட்சிக்கு அது குறித்து தெரிவிக்கப்படும் என ஜனாதிபதி சபாநாயகருக்கு தெரிவித்துள்ளார். (ம-7)

## அனைத்து தமிழ்...

இருந்து எங்களுடைய வீரவணக்கத்தையும் அஞ்சலியையும் அனைத்துத் தமிழ் உறவுகளும் செலுத்த வேண்டும் என தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்புக்கும், அரசியல் கட்சிகளுடைய தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று வியாழக்கிழமை பிற்பகல் நடைபெற்றது.

இதன்பின்னர் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பினர் கூட்டாக ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தி இந்தக் கோரிக்கையை விடுத்தனர்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட தவத்திரு வேலன் சுவாமிகள், சுயாதீனமாக உருவாக்கப்பட்ட தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு சுயாதீனமாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் இயங்கி வருகின்றது.

எங்களை யாரும் அணுகித் தங்களுடைய ஆலோசனைகள், கருத்துக்களை முன்வைக்கலாம். இதனடிப்படையில் தமிழ்த் தேசியப் பரப்பில் இருக்கின்ற கட்சிகளுடைய தலைவர்கள், பிரதிநிதிகள் உடனான சந்திப்பு நடைபெற்றது. இதன்போது சில தீர்மானங்கள் எட்டப்பட்டன.

இதன்படி, எதிர்வரும் செப்டெம்பர் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை உண்ணா நோன்பு இருந்து எங்களுடைய வீரவணக்கத்தையும் அஞ்சலியையும் தியாக தீபம் திலீபனுக்கு அனைத்துத் தமிழ் உறவுகளும் செலுத்த வேண்டும். தியாக தீபம் திலீபன் இன்னுயிரை ஈந்த இந்த நல்லூர் பூமியிலே அவருடைய நினைவாலயம் அமைந்திருக்கின்ற இடத்திலே உண்ணாவிரதம் நடைபெற இருக்கின்றது என்றார். (ம-7,18,33,104)

## அனைத்து சமூக...

பொதுச்சபையின் 77ஆவது அமர்வின் ஒரு பகுதியாக இடம்பெற்ற சிறுபான்மையினத்தவர் உரிமை குறித்த உயர்மட்ட கூட்டத்தில் உரையாற்றும் போது இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

சமூகங்கள் மத்தியில் நம்பிக்கை மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு தற்போதைய அரசாங்கம் முன்னுரிமை வழங்கியுள்ளது எனத் தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் சமூகங்களிற்கு இடையிலான ஐக்கியம் மற்றும் புரிந்துணர்வை கட்டியெழுப்புவதற்காக சமூக மற்றும் பாரம்பரிய வழமைகளைப் பின்பற்றி பல மட்டங்களில் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மதவெறுப்பு மற்றும் அலட்சியம் என்ற விடயத்தில் பூஜ்ஜிய சகிப்புத் தன்மையை அரசாங்கம் பின்பற்றுகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## ஐரோப்...

இதன்படி வன்னி நடவடிக்கையை மேற்கொண்ட இராணுவத் தளபதிகள் ஐரோப்பாவில் உள்ள 26 நாடுகள் உட்பட மேற்குலக நாடுகளுக்கு செல்ல முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைமீறி குறித்த 58 இராணுவ அதிகாரிகளும் 26 நாடுகள் உட்பட மேற்குலக நாடுகளுக்குச் சென்றால் கைது செய்யப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வன்னி நடவடிக்கையை மேற்கொண்ட இராணுவத் தளபதிகள், இராணுவ அதிகாரிகளின் பெயர்கள் சர்வதேச சட்டம் பொருந்தும் 100 நாடுகளுக்கு மனித உரிமைகள் பேரவையால் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதில் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரை கொல்லும் நடவடிக்கையை முன்னெடுத்த இராணுவ அதிகாரி ஒருவரின் பெயரும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சர்வதேச பொறிமுறையானது விசாரணைகள் மற்றும் ஆதாரங்கள் இன்றி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் இராணுவப் பணியாளர்கள் 58 பேருக்கு தண்டனை வழங்குவது இதுவே முதல் முறை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 076 097 3127

தன நிதானய
திகதி - 2022.09.22
சீட்டிழுப்பு இலக்கம் - 916
D 10 34 37 51
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

மஹஜன சம்பத
திகதி 2022/09/22
சீட்டிழுப்பு இலக்கம் 4886
F 6 6 9 0 5 1
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.09.22
சீட்டிழுப்பு இலக்கம் 195
துலாம் 01 24 49 61 துலாம்
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 22/09/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1234
R 20 01 16 55 75

கொவிசெத
திகதி 2022.09.22
சீட்டிழுப்பு இலக்கம் 3128
N 25 30 61 63
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 22/09/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1341
வெற்றி இலக்கங்கள்
கடகம் 2 5 9 2 3 3
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1861 | நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2022.09.22 | தினம் வியாழக்கிழமை
K 02 18 28 66
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,921,500/-

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.09.22
சீட்டிழுப்பு இல : 4022
வர்ணம் : சிவப்பு
ரூ. 3,618,660/-
வெற்றி இலக்கங்கள் 16 36 45 67 Z

ராசி
சுப்பர் ஜக்போட் ரூ. 2,166,666.40
திகதி 2022-09-22
வெற்றி வாரம் 3573
வர்ணம் கபிலம்
வெற்றி இலக்கங்கள் 16 24 39 60 | ரிஷபம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,678,540/-

26 வசனா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 38 06 11 72 74
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1037
வர்ணம் செம்மஞ்சள்
திகதி 2022.09.22 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 262,625,011/-
தொலைபேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

சுவர்ண வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 529 | திகதி 2022-09-22 | வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து Q | வெற்றி இலக்கங்கள் 23 49 61 | விதி எண் 03
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 12,778,976/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk


அத கோடிபதி
ADA KOTIPATHI
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1687
வர்ணம் : கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2022.09.22
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,866,480/-
வெற்றி இலக்கங்கள் 29 38 43 76 F


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு

# இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக வெளிநாட்டு தூதுவர்கள் உறுதி

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பெற்றுக்கொள்ள இலங்கைக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாக வெளிநாட்டு தூதுவர்கள் ஜனாதிபதியிடம் உறுதியளித்துள்ளனர்.

கடன் மறுசீரமைப்பு மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவியைப் பெறுவது தொடர்பில் ஜனாதிபதி வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு விளக்கமளித்தார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்ற இச்சந்திப்பின் போது, சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பெறுவதற்கும், கடன் மறுசீரமைப்பிற்கும் தமது ஒத்துழைப்பை வழங்குவதாக வெளிநாட்டுத் தூதுவர்கள் ஜனாதிபதியிடம் உறுதியளித்தனர்.

பரிஸ் க்ளப் (Paris Club) மற்றும் பரிஸ் க்ளப்பில் அங்கத்துவம் அல்லாத 23 நாடுகளின் தூதுவர்கள் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் இலங்கை நிச்சயம் இப்பிரச்சினையிலிருந்து மீண்டெழும் என்றும் வெளிநாட்டுத் தூதுவர்கள் இதன்போது நம்பிக்கை வெளியிட்டனர்.

கடன் மறுசீரமைப்பு தொடர்பான கலந்துரையாடல்களை இவ்வருட இறுதிக்குள் நிறைவு செய்ய எதிர்பார்ப்பதாகவும் அதற்கு தேவையான அனைத்து அர்ப்பணிப்புக்களை செய்து வருவதாகவும் ஜனாதிபதி இதன்போது வெளிநாட்டு தூதுவர்களிடம் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலை மற்றும் கடன் மறுசீரமைப்பு தொடர்பான முன்னேற்றம் குறித்து நிதியமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்தன மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ஆகியோர் இதன்போது விளக்கமளித்தனர்.

இதனையடுத்து, வெளிவிவகார தூதுவர்களுக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி, எதிர்கால சந்ததியினருக்காக தற்போதைய நெருக்கடியை, வெற்றிகொள்வதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இதற்காக அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடனும், சமத்துவத்துடனும் பணியாற்றும் என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ம-7)


### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 33 வயதான நிரந்தர உயர் வருமானம் பெறும் மணமகனுக்கு தொழில்புரியாத மணமகள் தேவை.
சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை. (12863)

078 341 1495

### சாரதி தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு உரும்பிராய் பிரதேசத்தை அண்மித்த பிரதேசத்தில் வசிக்கும் சாரதி (Driver) தேவை.
தொடர்பு (C-4961)

075 944 8104

### VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4921)
• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். | V2 TRAVELS
0777-068-777

### இலவச விசா வாய்ப்பு

அமெரிக்க லொத்தர் விசா
அமெரிக்கா செல்ல பாஸ்போட் எடுத்துவிட்டீர்களா? (C-4921)
!!!அலட்சியம் வேண்டாம்!!! October 05 பதிவு ஆரம்பம்
18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் விண்ணப்பிக்கலாம்
குடும்பத்தினருக்கு இரண்டு வாய்ப்புக்கள்|PASSPORT அவசியம்.
எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்காவில் நூற்றுக்கணக்கானோர் வாழ்கின்றனர்
V2 TRAVELS 0768226244 0768226240

### பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு

A/L எடுத்தவர்கள் மட்டும்- 6 மாத பயிற்சி
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-4921)
V2 TRAVELS
எமது கிளைகள்
● பயிற்சிக்கால ஊக்கத்தொகை -20,000/-
● பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
● பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
● வேலையின்போது ஆரம்ப சம்பளம் -25,000/-
49A,சப்பல் லேன் யாழ்ப்பாணம். 0777-068-777

### கிளிநொச்சி விசேட தேவைகளுக்குட்பட்டோர் வலையமைப்பு
### பணி வெற்றிடங்கள்

22.09.2022 நேற்றைய வலம்புரி பத்திரிகையின் இறுதிப் பக்கத்தில் வெளிவந்த
" கிளிநொச்சி விசேட தேவைகளுக்குட்பட்டோர் வலையமைப்பு பணி வெற்றிடங்கள் "
என்ற விளம்பரத்தின் தொலைபேசி இலக்கத்தை 077 831 7536 என திருத்தி வாசிக்கவும்.

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தாவடி சந்திக்கு அருகாமையில் 12 பரப்பு காணி விற்பனைக்கு
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- K.K.S வீதியில் இருந்து இரண்டாவது காணி
- பார்வையிடும் நேரம் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு (12866)
076 755 8606, 077 246 6031

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இருபாலையில் 06 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 km தூரத்தில்
- 2 பரப்பாக (நிலப்பரப்பு) பிரிக்கப்பட்ட நிலையில்
- BH Lane விக்கினேஸ்வரா சனசமூக நிலையம் அருகாமையில்
- 18 அடி பாதையுடன் நல்ல சூழல் நன்னீர் ஊற்று நிலம்
- யாழ். நகரில் இருந்து 4 km தூரம்
- 1 பரப்பின் விலை 600,000/= ரூபாய் (ஆறு இலட்சம்)
- பார்வையிடும் நேரம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரை

(12866)
077 288 0152, 077 148 8348

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்திக்கு அருகாமையில் 02 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- கைதடி சந்தியில் இருந்து 750M தூரத்தில்
- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- 20 அடிப் பாதையுடன்

(12866)
074 318 7263

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில் 24 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு
- மல்லாகம் சந்தியிலிருந்து பலாலி விமான நிலையம் செல்லும் பிரதான காபற் வீதிக்கு அருகாமையில்
- தெல்லிப்பளை வைத்தியசாலையில் இருந்து 750m தூரத்தில்
- K.K.S வீதியில் இருந்து 1Km தூரத்தில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

(12866)
077 874 8135, 077 408 2649




யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை - நல்லையம்பதி

### அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தின்

ஈஷான பாகத்தில் அமைந்துள்ள

### சிங்காரவேலவன் சிவகாயத்திரி சுந்தர சுவர்க்கவாயில் சந்நிதானம்

### மஹாளய சிரார்த்த அனுஷ்டானம்
### 23/24/25.09.2022 (வெள்ளி, சனி, ஞாயிறு)

இன்றைய தின வழிபாடுகள் இலங்கைத் திருநாட்டிலே சுனாமி அனர்த்தத்தினால் இறந்த உயிர்களின் ஆத்மா சாந்தியடைவதற்காக பிண்டமிட்டு தர்ப்பணம் செய்து வழிபாடாற்றப்படும்.

குறித்த வழிபாட்டில் கலந்துகொண்டு சுனாமி அனர்த்தத்தினால் இறந்த உயிர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போமாக.

குறிப்பு:- 11.09.2022 மஹாளய பட்சம் ஆரம்பமாகி தினமும் அபிஷேக பூஜை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. குறித்த வழிபாடு 25.09.2022ஆம் திகதியன்று ஏகாதச ருத்ர மஹாயாகம் நடைபெற்று நிறைவடையும். குறித்த காலங்களில் அடியவர்கள் தமது மூதாதையர்களுக்கு பிண்டம் இட்டு, தர்ப்பணம் செய்து நெய்தீபம் ஏற்றி, மோட்சார்ச்சனை செய்து தங்களது கரத்தினால் தர்ப்பண லிங்கேஸ்வரப் பெருமானுக்கு ஜல அபிஷேகம் செய்து மஹாளய அனுஷ்டான பிதிர்க்கடன்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

**நண்பகல் 12.00 மணிக்கு மகேஸ்வர பூஜை ( அன்னதானம் ) இடம்பெறும்.**

இங்ஙனம்
தர்மபரிபாலன சபை

(C-4962)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.09.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.